குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.164/2013

அ.சா.2

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் 20–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | ஜாதி | |
| தந்தை பெயர் | பழனியப்பகவுண்டர் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.47 மணி,

Accused Ganesan absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. A.Sivakumar present. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் வடக்குக்காட்டில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தில் KA 01 AD 4777 என்ற பதிவெண் உடைய டாரஸ் லாரி சொந்தமாக வைத்து தொழில் செய்து வந்தேன். எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியும். சம்பவ காலத்தில் எதிரி எனது லாரியின் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். 2013 ம் ஆண்டு காலை 09.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள்ளாக நான் எனது லாரியை உருளைக்கிழங்கு லோடு இறக்குவதற்காக அட்வான்ஸ் தொகை கொடுத்துவிட்டு அனுப்பிவிட்டு வீட்டில் இருந்தேன்.

2. பாகல்பட்டியில் எனது லாரி கவிழ்ந்து இரண்டு நபர்கள் இறந்துவிட்டதாக அருகில் இருந்தவர்கள் போன் மூலம் தகவல் சொன்னார்கள். விபத்து நடந்த போது எதிரி கணேசன் லாரியை ஓட்டினார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். இருசக்கர வாகனத்தில் நான் சென்ற போது அந்த வாகனம் சாய்ந்து எனக்கு அடிப்பட்டது. லாரி விபத்து நடந்த அன்றைய தினமே எனக்கு இருசக்கர வாகனம் விழுந்து காயம் ஏற்பட்டது. சேலம் அரசு மருத்துவமனையில்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.08.20 17:47:10 +0600

சேர்ந்து சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 13.04.2013 ம் தேதி காலை 09.30 மணியளவில் முத்துநாயக்கன்பட்டியில் இருந்து சேலம் செல்லும் சாலையில் பாகல்பட்டி ஏரிக்கரை என்ற இடத்தில் சேலம் நோக்கி எனக்கு சொந்தமான KA 01 AD 4777 என்ற பதிவெண் உடைய டாரஸ் லாரியை எதிரி கணேசன் ஓட்ட நானும் கிளீனர் சக்திவேல் என்பவரும் லாரியின் உள்ளே அமர்ந்து பயணம் செய்த போது மேற்படி லாரியை எதிரி கணேசன் அதிவேகமாகவும் அஜாக்கரதையாகவும் ஓட்டிச் சென்று அதே சாலையில் TN 30 AP 4756 என்ற பதிவெண் உடைய ஹீரோஹாண்டா சிடி டீலக்ஸ் இருசக்கர வாகனத்தில் இளங்கோ என்பவர் ஓட்டுநர் இருக்கை பகுதியில் அமர்ந்து கொண்டு அவருக்கு பின்னால் குணா என்பவர் கௌதம் என்பவர் உட்கார்ந்து கொண்டு இருசக்கர வாகனத்தை நிறுத்தி பேசிக்கொண்டு இருந்த நபர்கள் மீது எதிரி கணேசன் லாரியை மோதி அவர்கள் மீது கவிழ்த்து விபத்து ஏற்படுத்தினார் என்றும் அப்போது லாரிக்கு உள்ளே அமர்ந்து இருந்த எனக்கு காயம் ஏற்பட்டதாகவும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு பழக்கமானவர் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 12.59 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.08.20 17:47:14 +0600